DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரியம்மாள் | Father/Husband Name : சின்ன வாழவந்தான் |
| Age : 30 | Village : நத்தத்துப்பட்டி |
| Taluk : | Calling : கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2 Jul 2026 13:11

(Accused Present)

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் நத்தத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1 வது எதிரி என்னுடைய கணவர் ஆவார். 2 வது எதிரி என்னுடைய கணவரின் அண்ணன் ஆவார். 3 வது எதிரி என்னுடைய கணவரின் அண்ணி ஆவார்.

2. என்னுடைய கணவர் குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்து வந்தார். அதனால் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். நான் தற்போது என்னுடைய அம்மா வீட்டில் இருந்து வருகிறேன். நான் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகி விட்டேன். ஆகையால் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்க எனக்கு விருப்பமில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. (**<u>புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**).

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரிகள் என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன். (**<u>சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**) வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது**)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

4. 06.08.2023 ம் தேதி நான் எங்கள் ஊரில் நடத்தி வந்த பெட்டிக்கடையில் இருந்தபோது என்னுடைய கணவர் என்னிடம் பணம் கேட்டு பிரச்சனை செய்தார் என்றாலும், அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் என்னை ஆபசமான வார்த்தைகளால் பேசி, அடித்து காயம் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றாலும் இல்லை. மேற்படி சம்வத்திற்கு நான் காவல்நிலையத்தில் புகார் அளித்து போலீசார் விசாரணையில் அதே விவரத்தை கூறிவிட்டு தற்போது எதிரிகள் என்னுடைய உறவினர்கள் என்பதால் அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

2 Jul 2026 13:14

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P